**கதைச்சுருக்கம்**

இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் பாலமுனை கிராமத்திலே வசித்துவரும் ஒரு ஏழை மீனவனின் பிள்ளைகள் படித்து உரிய தகமைகளைக் கொண்டிருந்தும் அவர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்காமல் இருக்கிறது. இந்த நேரத்தில் அவர்களுக்கு கிடைக்க இருந்த தொழில் வாய்ப்புஅவர்களின் அருகிலே வசித்து வரும் செல்வந்தர் ஒருவரால் தன் பிள்ளைகளுக்கு பெற்றுகொடுப்பதற்காக பணபலம், செல்வாக்கு, சூழ்ச்சி,இலஞ்சம் மற்றும் மோசடி மற்றும் தவறான தொடர்பு மூலம் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் ஒருவரைக்கொண்டு இல்லாமல் செய்யப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள பெண் மகள் தற்கொலைக்கு முயற்சிக்கிறாள். இதனை தொடர்ந்து குற்றவாளிகள் சட்டத்துக்கு முன் கொண்டு வரப்படுகின்றனர்.

**பாத்திர விளக்கங்கள்**

இஸ்மாயில்- ஏழை மீனவன் (ஹுஸ்னா, பர்ஹா, இல்யாஸ் ஆகியோரின் தந்தை)

கதீஜா- இஸ்மாயிலின் மனைவி (ஹுஸ்னா, பர்ஹா, இல்யாஸ் ஆகியோரின் தாய்)

ஹுஸ்னா- இஸ்மாயிலின் மூத்த மகள்

பர்ஹா- இஸ்மாயிலின் இளைய மகள்

இல்யாஸ்- இஸ்மாயிலின் இளைய மகன்

பாரூக்- இஸ்மாயிலின் அருகில் வசிக்கும் செல்வந்தர்

முஜீப் - தவறான வழியில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் ஒருவர்

நதீர் - பாரூக்கின் மகன்

அதிகாரிகள்- தேசிய நீர் வடிகாலமைப்பு அதிகாரசபையில் உயர்பதவி வகிப்பவர்கள்

முதியவர்- தேசிய நீர் வடிகாலமைப்பு அதிகாரசபையில் ஒரு விடயத்துக்காக வருபவர்

காரியாலய சிற்றூழியன்

தாதி

உளவளத்துணையாளர்

போலீஸ் அதிகாரி

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரி

இலஞ்ச ஊழலுக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்பின் தலைவர்

## காட்சி-01

(**பாத்திரங்கள்** :- இஸ்மாயில், கதீஜா, ஹுஸ்னா, இல்யாஸ்)

**இடம்**:-இஸ்மாயில் வீடு

**இஸ்மாயில்**:-மகள்,ஹுஸ்னா என்ன மகள் இன்ரவிக்குப் போனயில்லவா என்ன நடந்த? என்ன சொன்னாங்க,வேல கிடைக்குமா?

**ஹுஸ்னா**:-எங்க வாப்பா வேல கிடைக்குற? இன்ரவி போட்லேயே சொல்ராங்க எம்பிட ரெகமன்டேசன் வேணுமாம் இல்லாட்டி கொஞ்சம் செலவாகுமாம் வாப்பா.

**உம்மா**:-என்ன புள்ள இன்னமும் காசு கேட்டா நாங்க எங்க போற? இந்த மனிசன் இருக்கிற நிலைய பாரு நாங்க உங்கள படிக்க வைக்க வயித்த பொத்தி வாய பொத்தி சேத்த காசுல ஒன்ன எச்எண்டியபடிக்க வெச்சி உன் தங்கச்சிய கெம்பசிக்கு அனுப்பி உன் தம்பிய ஏஎல் படிக்க வெச்சி வாப்பா வேணாண்டு பெய்த்து ம்.ம்ம் . . . . . . . . .
எப்பதான் நமக்கு நல்ல காலம் பொறக்க போகுதோ தெரியல.

**இஸ்மாயில்**:-அத விடு பிள்ள அது நம்மட கடமை. புள்ளைகள படிக்க வைக்கிறது பெத்தவங்கட கடமை. ஆனாப் படிச்ச படிப்புக்கு வேலதானே கிடைக்குதுல்ல.

**ஹுஸ்னா**:-நான் என்ன செய்ற வேலைக்கு கேட்ட முழுத் தகமையும் என்கிட்ட இருக்கு. இங்கிலிஸ் தேவை என்டாங்க அத படிச்சன், கொம்பியூட்டர் வேலை தெரிஞ்சுக்கனும் என்டாங்க அதையும் படிச்சன் ஆனா இன்னமும் அது காணாது இது போதாதுஎன்காங்க.

**இல்யாஸ்**:- (தம்பி சத்தமாக அழைத்துக் கொண்டு உள் நுளைகிறான்)ராத்தா…., ராத்தா விசயம் தெரியுமா? நம்மட அடுத்த ரோட்டுல இருக்கிற நசீருக்கு வோட்டப் போட்டுல கிளார்க் வேலையாம்.

**உம்மா**:-என்னடா செல்றாய்? அந்தப் பொடியன் ரோட்டுல ரவுடி பத்திக்கி திரஞ்சவன். சாராயமும் வீடிக்கட்டும்தான் அவன்கூட இருக்கும் அவனுக்கா வோட்டப்போட்டுல வேல. புள்ள நீயும் அந்த வேலைக்கு இன்ரவிக்கு போனல்லவா?

**ஹுஸ்னா**:-ஓம் உம்மா….. எனக்கு இன்ரவி நடக்கும் போது அவன் ஒருஆள் கூட உள்ள வந்தான். அவரு ஒரு பயிலும் ஒரு கவறும் கொடுத்தாரு அங்க இருந்த சேர் அங்க வந்த ஆளப் பார்த்ததும் சேர், சேர் என்று ஒன்றுக்குப் பத்துத் தரம் சொன்னாரு பிறகு போய்ட்டாரு ம் ம் ம்………… நல்லவனுக்கு காலமில்ல.

**இஸ்மாயில்**:-இப்பயெல்லாம் படிச்சு செட்பிக்கட்டு வெச்சிக்கி இருப்பதுல பலனில்ல எம்பி மாரையும் அவங்கட கோடினேட்டரையும் நல்லாத் தெரியிறத்தோட நாலு பேருக்கு மண்ட வெடிக்கிற மாதிரி அடிக்கவும் தெரியனும்.
அது சரி இவ்வளவு நேரமாகிட்டு இந்த இளயவள் பர்ஹாவ காணல்ல எங்க போயிட்டாள்?

## காட்சி-02

(**பாத்திரங்கள்**:- நசீர், பாறூக், பர்ஹா,முஜீப்)

**இடம்**:-பாறூக் இல்லம்

**பாறூக்**:-என்ன புள்ள சொல்றாய்? எத்தன தரம் கேக்குற? ஓரு முடிவச் சொல்லன்.

**பர்ஹா**:-அங்கிள் நீங்க கேக்குற விசயம் சரியில்ல. உங்கட மகள் என்ட ப்ரன்ட்தான் அத நான் ஒத்துக்கிறன். அவட பேரும் என்ட பேரும் பர்ஹாதான். அவள் வரச்சொன்ன என்டதுக்காகத் தான் நான் இங்க வந்த. ஆனா இங்க வந்து பாத்தா அவள் வேற எங்கேயோ போயிட்டாள். நீங்க என்னன்டாநான் வந்ததுல இருந்து என்ட ஓ எல் , ஏ எல் ரிசேல்ஸ், டிக்கிரி செடிபிகேட்டுகள் எல்லாத்தயும் கேக்குறிங்க. அப்படிச் செய்ய ஏலா அங்கிள் புரிஞ்சி கொள்ளுங்க. அது கள்ள வேல. புடிமானம்.

**முஜீப்**:- என்ன புள்ள நீ அறப்படிக்காய்? செய்யலாம் என்டுதானே சொல்றன். ஒனக்கு விசயம் விளங்குதில்ல எல்லாத்தயும் செய்யிற நான். டிப்பாட்மன்ட்ல எனக்குத் தெரியாத ஆக்களே இல்ல. அஞ்சப் பத்தக் குடுத்தா எல்லாத்தயும் மாத்துவாங்க. இங்கப் பாரு புள்ள உங்கட வீட்டு நிலமைய விளங்கியெடு ஒங்க வாப்பாட வயது மௌத்தாகுற வயது. உம்மாவும் சீனி, பிரசர் என்டு கஸ்டப்படுறா. இன்னமும் ஒங்க லாத்தாக்கு வீடு கட்டல, உன் தம்பியும் படிச்சிக்கி அப்படியே இருக்கான். இதுக்குள்ள எங்க வேல எடுத்து வீடு கட்டி கல்யாணம் முடிக்குற? நாங்க என்ன சும்மாவாகேக்குறம்? காசு 15 இலட்சம் தாரம் நீ ஒன்ட எல்லாத்தையும் தா என்ன சரியா?

**நசீர்**:-ஹலோ, நீங்க என்னதான் படிச்சி சேட்டிபிக்கேட் வெச்சி இருந்தாலும் நோ யூஸ். போன கிழமை வோட்டபோட் கிளார்க் இன்ரவில உங்க ராத்தாவுக்குத்தான் நிறைய குவாலிபிகேசன் இருந்தது. ஜொப் கிடைக்கிறன்டா அவக்குத்தான் கிடைக்கனும். ஆனா அங்கிள்கிட்ட சொன்னன். அவரு வாப்பாவ எம்பியோட பேச சொன்னாரு. நிறைய -இல்ல எல்லாமாகசெயார்மனுக்கு இரண்டு லட்சம், ஓஜிசிக்கு இரண்டு லட்சம் அங்கிளுக்கு ஒன்டு, என்டு மொத்தம் ஐந்து இலட்சம் தான் கொடுத்தம். ஜொப் எனக்கு சொந்தமாகிட்டு.ஈவின் எனக்கிட்ட ஓஎல் ரிசேல்ட் கூட இல்ல. நாங்க நெனச்சா எல்லாத்தயும் சாதிப்பம். இப்ப எங்க ராஜ்ஜியம்தான்.

**பாறுக்** :- புள்ள நீ ஒன்டும் கவலப்படாத உனக்கும் வேலகிடைக்க நான் ஏற்பாடு செய்றன். இது ஒபிசர் வேல.இதுக்கு ஓலெவல்,ஏலெவல், டிக்கிரி செட்டிபிகேட் எல்லாம் வேணும். அது என்ட புள்ளகிட்ட இல்ல. அதால தான் ஒன்ட எல்லா ரிசல்சயும் என்ட மகள்ர என்று காட்டி அடார் பண்ணப்போறம்.உனக்கு 15 லச்சம் காசு தாரம். நீ ஒத்தருக்கிட்டயும் சொல்லாத. நீ ஏன் இன்னும் யோசிக்காய்?ஒன்ட எதிர்காலம் பற்றித்தானே? இந்த காரியத்த மட்டும் நீ செய்தா என்ட மகன் நதீர ஒன்ன கலியாணம் முடிக்கச் சொல்ரன். சரியா?

(பர்ஹா தலையைக் குனிந்தபடி யோசிக்கிறாள்)

**பர்ஹா**:-சரி அங்கிள். நான் இதப் பற்றி யோசிக்கணும்.இங்க வந்தும் நேரமாகிட்டு வீட்ட தேடுவாங்க. யோசித்து ஒரு முடிவச் சொல்றன்.

**முஜீப்** :-நல்ல முடிவா சொல்லு. பட் வேற யாருக்கிட்டயும் இது பத்திச் சொல்லிடாதே!!!!

(பர்ஹா வீட்டுக்குச் செல்கிறாள்)

**நதீர்**:-என்ன வாப்பா நீங்க அந்தப் பிள்ளைய நான் முடிப்பன் எண்டு சொல்லிட்டிங்க. எனக்கு விருப்பம் இல்லாம நான் அவள முடிக்க மாட்டேன் சரியா?

**பாறூக்**:-இவன் வேற எனக்கு என்ன லூசா? அவளப் போய் உன்ன முடிக்கச் சொல்ல?அவளுகள்ற குலமும் குடும்பமும் கரவான் கூட்டம். எல்லாம் காரியம் சாதிக்கத்தான் மகனே விளங்கியெடு பின்னுக்கு உதவும். இப்பயும் இவளுக்கு 15 லச்சம் குடுக்கவா போறம்? அன்னா இன்னா என்டு சொல்லி ஏமாத்தலாம்.

## காட்சி – 03

**(பாத்திரங்கள்**:- இலஞ்சம்ஊழலுக்குத் துணை போகும் அதிகாரிகள்,முஜீப்,முதியவர், காரியாலய சிற்றூழியர்)

**இடம்**:-காரியாலயம் (தேசிய நீர்வழங்கல் அதிகார சபை பிராந்திய அலுவலகம்)

**முஜீப்**:-குட் மோனிங் சேர்......

**அதிகாரிI**:-ஆஹா குட் மோனிங்.ஆஆஆ....முஜீப் பொஸ் கொஹொமத? என்ன மாதிரி புதிசா ஒரு கேஸிம் வரலியா?

**அதிகாரிII**:- என்ன சேர்? நான் காலையில சொன்னன் தானே எனக்கு உள்ளங்கை கடிக்குது பண வரவு இருக்குமென்று.

**அதிகாரி I**:- ம்ம்ம்......... எஸ் எஸ் அதான் முஜீப் சேர் வந்திருக்காரே. இவரப் போல ஆட்கள் இருக்கும் வர நமக்கு நல்ல காலம்தான்.

**முஜீப்**:- சேர் மூன்று புதுக் கேசுகள் இருக்கு. எல்லாம் மொத்தம் பதினஞ்சு இலட்சம் தரக்கூடிய கேசுகள். உங்களுக்கு ஆளுக்கு நாலு, நாலு கிடைக்கும். அதில முக்கியம் எம்பிட மச்சான் பாறூக் பொஸ்ட மகள்ர விசயம்.

**அதிகாரிI**:-ஓஓஓ எஸ். எம்பியும் அது விசயமா மோனிங் எங்கிட்ட ஞாபகப்படுத்தினார். அத நாங்க பாத்துக்கிறோம். நீங்க மறக்காம எங்களப் பாத்துக்கொள்ளுங்க. (கொஞ்சம் இரப்பது போலக் காதை இருவரும் சொறிந்து கொண்டு)

**முஜீப்**:- நான் பிறகு வாரன் சேர்.

(முஜீப் செல்கிறார் ஓர் ஏழை முதியவர் உள் நுழைகிறார்)

**முதியவர்**:-சேர்.................. எத்தன நாளா அலையிறன். என்ட புள்ளட வோட்ட சப்ளே தண்ணி எடுக்கிற வெளக்கமாக.

**அதிகாரிI**:- முறைப்பாட்டுக் கடிதத்தை தாங்க.

**முதியவர்**:-நான் ஏற்கனவே தந்துட்டேங்க.

**அதிகாரி II**:-தந்த பிறகு ஏன் இன்னும் இந்த நட?இனி நாங்க பாத்துக்குவோம். இந்த வயசான காலத்தில நடந்து திரியாம வீட்டுக்க ஒழுங்கா கிடக்கணும் சரியா? இப்ப நீங்க போகலாம்.

(முதியவர் திரும்புகிறார்)

**காரியாலய சிற்றூழியர்**:- பெரியவரே!!! இங்க நில்லுங்க. அந்த சேர்மார் முறைப்பாட்டுக் கடிதத்துக்கு என்னன்டும் எக்சன் எடுக்க மாட்டானுகள். எனக்கிட்ட 20ஆயிரம் காசு தாங்க. நான் புடிக்கிற ஆக்கள புடிச்சி கொடுக்குற இடத்துல குடுத்து நீட்டுற இடத்துல நீட்டி ஆகுற காரியத்தப் பாக்கன்.

**முதியவர்**:- ம்ம்ம்.......... அல்லாஹ்......... ஏழையள்ற வகுத்துல இப்படியும் ஒரு அடி. சரி தம்பி இப்போதைக்கு என்ட கைல காசி இல்ல. நாளைக்கு என்ட புள்ளட காப்ப ஈடு வெச்சி கொண்டு வாரன்.

## காட்சி – 04

(வீடு வந்த பர்ஹா ஆழ்ந்த சிந்தனையின் பிறகு ஏதோ ஒரு முடிவு எடுத்தவளாக நித்திரைக்குச் செல்கிறாள். அடுத்த நாள் காலையில் தன் ஆவணங்கள் அடங்கிய கோப்பை கைகளில் எடுத்துக் கொண்டு பாறூக்கின் இல்லம் நோக்கி விரைகிறாள் )

**பர்ஹா:**-அங்கிள் நீங்க சொன்னாப் போல என்ட எல்லா ஆவணங்களையும் கொண்டு வந்திட்டன். நீங்க எனக்குத் தாற காச விடகடைசியாச் சொன்ன என்ட வாழ்க்கை விசயமே என்ன இந்த முடிவ எடுக்க வைத்தது.இன்ஷா அல்லாஹ்!அத மறக்காதிங்க.

**பாறூக்:**- சரி, நீ கவலப்படாம போ. அத நான் பாத்துக்கிறன்.

## காட்சி – 05

(இரண்டு மாதங்கள் கழிந்த நிலையில் பாறூக்கின் மகளுக்கு ஊழல் மோசடி, இலஞ்ச பரிமாற்றம் மூலமாக தேசிய நீர் வடிகாலமைப்பு அதிகார சபையில் வேலை கிடைக்கிறது. அத்துடன் பர்ஹாவின் தோழிகள் அனைவரும் அரசாங்கத்தின் தொழில்வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.இந்நிலையில் பாறூக்கின் மகன் நசீருக்கு ஒரு நகைக்கடை முதலாளியின் மகளை நிச்சயம் செய்கிறார்கள். மேலும் இவர்களால் வழங்கப்படுவதாகக் கூறப்பட்ட ரூபா 15 இலட்சம் வழங்கப்படவில்லை. இந்நிலையில் கடும் மன உளைச்சலுக்குள்ளான பர்ஹா தற்கொலைக்கு முயற்சித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறாள்)

**இடம்:**- வைத்தியசாலையில் நோயாளர் விடுதி.

**கதீஜா:**-என்ட அல்லாஹ்வே!!!! நாங்க என்ன செய்த? நீ ஏன் இந்த முடிவுக்கு வந்த? உனக்கு என்ன மகள் நடந்த? உங்க வாப்பா மௌத்தாகுற வயசுல இருந்துக்கு இந்த கஷ்டத்தையும் தாங்கணுமா?
என்ன நடந்த மகள்? வாயத் தொறந்து பேசு மகள்.

**தாதி:**-அம்மா பேசன்ட டிஸ்டொப் பண்ண வேணா? கொஞ்சம் வெளியாகுங்க. அவங்களோட பேச கிளினிகல் கவுன்சிலர் வந்திருக்காரு.கொஞ்சம் வெளிய போங்க.
(அம்மா வெளியே போகிறார்)

**உளவளத்துணையாளர்** :- பர்ஹா! உங்க வாழ்க்கையில இதுக்கு முதல் பல கஸ்டமான சம்பவங்கள் நடந்திருக்கு என்று விளங்குது. அவைகள நீங்க என்னோடு பகிர்ந்து கொண்டால் தான் நீங்க உங்கட பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும். ஆகவே தயவு செய்து உங்கள் மனக்கவலைய என்னிடம் விரிவாகக் கூறுங்கள்.

( பர்ஹா மிக நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு தனது பிரச்சினைகளை வெளியிடுகிறாள். உளவளத்துணையாளர் சகல விடயங்களையும் குறிப்பெடுக்கிறார். இது தொடர்பாக பிரதேச பொலிஸ் நிலையம் , இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிரான அரசசார்பற்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு விடயத்தைக் கையளிக்கிறார்.)

# காட்சி – 06

(**இடம்** :- இலஞ்ச விசாரணை ஆணைக்குழுப் பணியகம்)

**பாத்திரங்கள்** :- பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் , உளவளத்துணையாளர், பொலிஸ் அதிகாரி,இலஞ்ச விசாரணை ஆணைக்குழுஆணையாளர் , அரச சார்பற்ற அமைப்பின் தலைவர்)

**விசாரணை நடக்கிறது..........................**

**பொலிஸ் அதிகாரி** :- மேற்படி பர்ஹா என்ற பெண் தொடர்பில் இடம்பெற்ற விடயங்கள் அனைத்தும் சட்டத்திற்கு எதிராகவும் மனச்சாட்சிக்கு எதிராகவும் நடந்து உள்ளது. ஆகவே இது தொடர்பில் இச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் குற்றவாளிகளாக நிறுத்தப்பட வேண்டியவர்கள். பாறுக், புறோக்கர் முஜீப் சம்பந்தப்பட்ட அதிகாரிகளான நீங்கள் இருவரும் , பாறுக்கின் மகள் பர்ஹா, மகன் நதீர் அத்துடன் ~~இல்யாசின்~~ இஸ்மாயிலின் மகள் பர்ஹா உட்பட எல்லோரும் குற்றவாளிகளே. ஆனால் பர்ஹா இதில் பாதிக்கப் பட்டவளாக இருப்பினும் ஒரு மோசடியொன்று இடம்பெற உடந்தையாக இருந்துள்ளாள். அறியாமை காரணமாக குற்றம் புரிந்தாலும் சட்டத்தில் அதற்கு நிவாரணம் இல்லையென்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

**இலஞ்ச விசாரணை ஆணைக்குழு ஆணையாளர்** :- இது விடயம் தொடர்பாக மேற்படி அதிகாரிகளான உங்கள் இருவரினதும் குற்றம் நிரூபிக்கப்படுமாயின் உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்படும். மேலும் உங்கள் சொத்துக்களை பறிமுதல் செய்து வேலையைவிட்டும் பணிநீக்கம் செய்வோம்.

**அதிகாரிகள்** :-ஐயோ! தெரியாமல் செய்துவிட்டோம் சேர். மன்னித்துவிடுங்கள். இனி ஒருபோதும் இவ்வாறு செய்யமாட்டோம். நாங்களும் பணிக்கு வந்த புதிதில் ஒழுக்கமாக சட்டத்தை மதித்துத்தான் இப்பணியைத் தொடர வேண்டும் என இருந்தோம்.ஆனால் அப்பிரதேச அரசியல்வாதிகளும் அவர்களின் அடியாட்களும் எங்களை மிரட்டினார்கள்.பணத்தைக்காட்டி மயக்கிவிட்டார்கள்.

**அரச சார்பற்ற அமைப்பின் தலைவர்** :- அவ்வாறு கூறி நீங்கள் இருவரும் குற்றத்தில் இருந்து இலகுவில் தப்பிவிட முடியாது. நீங்கள் படித்தவர்கள் மற்றும் உயர் பதவி வகிக்கும் அரச அதிகாரிகள். உங்களுக்கு உங்கள் பணிகளில் ஏதேனும் சவால் வரும் நேரத்தில் அதற்கு உரியமுறையில் முகம் கொடுக்க வேண்டும் இவ்வாறு குறுக்கு வழியில் அல்ல.

**பொலிஸ் அதிகாரி** :- புறோக்கர் முஜீப் உன்னைப் போல சில குள்ள நரிகள்தான் இந்தச் சமூகத்தில் இன்னும் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்துகின்றார்கள். படித்துப் பட்டம் பெற்று சகல தகைமைகளையும் கொண்டவர்களுக்கு சம சந்தர்ப்பம் உங்களைப் போன்றோரால் வழங்கப்படுவதில்லை. ஏற்றுக்கொள்கிறீரா?

**முஜீப்**:- ஆமாம் ஏற்றுக்கொள்கிறேன்.

**பொலீஸ் அதிகாரி**:- என்ன பாரூக் ஹாஜியார், நீயெல்லாம் சமூகத்தில பெரிய இடத்துல இருந்து கொண்டு இப்படித்தானா ஏழைகள்ற வாழ்க்கையில விளையாடுறது... ம்ம்ம்ம்....... எம்பி உங்கட சொந்தம் எண்டா சண்டியன் என்று நினைப்போ???? (உரத்த தொனியில்) உங்கட விஷயம் நிரூபிக்கப்பட்டால் நிச்சயமாக மறியல் தண்டனைதான்.

(அருகில் இருந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளை நோக்கி)

சேர்! இந்த மாதிரியான ஆட்கள் செய்யும் வேலையால நாட்டுல ஆங்காங்கே இப்படியான சில சம்பவங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இத அடியோட ஒழிக்கிறதுக்கு ஏதேனும் திட்டங்கள் உங்களிடம் உள்ளனவா?
**இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணையாளர், அரச சார்பற்ற நிறுவனத் தலைவர் இருவரும்**:- ஆமாம்.

**இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணையாளர்**:- எங்கள் வசம் நிறைய திட்டங்கள் உள்ளன அவற்றை நாட்டில் சில இடங்களில் அமுல் படுத்தியும் உள்ளோம். ஆனால் இச்சம்பவத்திற்குப் பிறகு இத்திட்டங்களை மிகவும் பரவலாக அமுல் படுத்த இருக்கிறோம். அது மட்டுமல்லஇந்த நாட்டு மக்களுக்கு ஒரு விடயத்தை நான் சொல்ல வேண்டும்.
***"அரசாங்க ஊழியர்கள் மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்குகின்றனர். ஆகவே மக்களுக்காக அவர்கள் கடமையாற்ற வேண்டியவர்கள். அவர்களிடமிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ள மக்களுக்கு உரிமையுண்டு. அதற்காக இலஞ்சம் கொடுக்கத் தேவையில்லை. அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கேட்டால் அது தொடர்பாக 1954 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ள முடியும். அத்தோடு குறுக்கு வழி மூலம் காரியம் சாதிக்க நினைப்போரும் எம் சமூகத்தில் உள்ளனர். இலஞ்சம் கொடுப்போர், இலஞ்சம் வாங்குவோர், இலஞ்சத்துக்கு துணை போவோர் அனைவரும் சட்டத்துக்கு முன் குற்றவாளிகளே."***

**அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்**:- அது மட்டுமல்ல இலஞ்சம் மற்றும் ஊழலை நாட்டில் இருந்து முழுமையாக ஒழிப்பதற்காக நாம் இனி பல அமைப்புகளுடன் சேர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட போகிறோம். நாட்டின் உயர் மட்டத்துடன் இவ்வாறான விடயங்களை கையாள புதிய குழுவொன்று உருவாக்க உள்ளோம். பொது மக்கள் எங்களோடு சேர்ந்து ஒத்துழைப்பு தந்தால் எங்களால் வெற்றி கரமாக செயற்பட முடியும். அதற்காக நாங்களும் இலஞ்சம் மற்றும் விசாரணை ஆணைக்குழுவும் ஏனைய சமூக அமைப்புக்களும் சேர்ந்து "இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்" எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் செயற்றிட்டங்களை முன்னெடுக்கப்போகிறோம்.

**இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணையாளர்**:- அத்துடன் ஊழல் இல்லாத அபிவிருத்தி அடைந்த நாடுகளின் அரசியல் பொருளாதார நிலைமை, அந்த நாட்டு மக்களின் பண்புகளை எம் நாட்டு மக்களுக்கு உதாரணமாக எடுத்துக் காட்ட வேண்டும். ஆட்சிக்கு வரும் அரசியல் வாதிகளுக்கு இது தொடர்பாக பல கருத்தரங்குகளை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

**பர்ஹா**:- சேர்! இதோ இந்த பெரிய மனிதர்கள் என்னை நம்ப வைத்து ஏமாற்றி என் வாழ்க்கைய குழி தோண்டி புதைத்து விட்டார்கள். இப்போது நான் என் தாய் தந்தைக்கு என்ன பதில் சொல்லுவேன். அது மட்டுமில்ல சேர் இதோ நிற்கும் பாரூக் ஹாஜியாரின் மகன் நதீர், என் சகோதரி ஹுஸ்னாவின் தொழில் பெறும் வாய்ப்பை அவனின் தந்தையின் செல்வாக்கைவைத்து பறித்து விட்டான். இப்ப எங்க குடும்பமே நடுத்தெருவில நிக்குது. அதோட அவர்ர மகனை திருமணம் முடித்துத் தருவதாகக் கூறி என்னை ஏமாற்றி விட்டார்கள். இதுகள தாங்க முடியாமல் தான் நான் தற்கொலைக்கு முயற்சி செய்தேன்.
(அழுகிறாள்)

**பொலிஸ் அதிகாரி**:- கவலைப்பட வேண்டாம். சகல விடயங்களையும் நாங்கள் அறிந்த பின்புதான் உங்கள் அனைவரையும் விசாரணைக்கு அழைத்தோம். உங்கள் உளவளத்துணையாளர் சகல விடயங்களையும் எங்களிடம் கூறி விட்டார். உங்களுக்கும் உங்கள் சகோதரிக்கும் நடந்த சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே நாங்கள் உரிய திணைக்களத்துக்கு அறிவித்து விட்டோம்.இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் உங்களுக்கும் உங்கள் சகோதரிக்கும் அரச தொழில்கிடைக்க நாம் உதவுவோம். கவலைப்படாதீர்கள். அத்துடன் இவனைப் போன்ற அயோக்கியன் உங்களுக்கு துணைவராக வரவில்லையென்று இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

(பர்ஹா தன் மனதை தேற்றிக்கொண்டவளாக வீடு திரும்புகிறாள். ஏனையோர் அடுத்த கட்ட விசாரணைக்காக விளக்க மறியலில் வைக்கப்படுகிறார்கள்)

xx முற்றும் xx

**சொல் விளக்கங்கள்**

ராத்தா- மூத்த சகோதரி

உம்மா, வாப்பா- அம்மா, அப்பா

மௌத்தாகுதல்- இறத்தல்

செப்பிகாட்- சான்றிதழ்

கேஸ்- விடயம்

கரவான்- மீனவத்தொழில் செய்வோர்

புறோக்கர்- தரகர்

அறப்படித்தல் - அதிகமாகப் பேசுதல்